**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

**ஊடக அறிக்கை**

**2019-20 கல்வியாண்டுக்கு புலம்பெயர் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் திட்டம்**

இந்திய அரசாங்கம் 2006-07 இலிருந்து “புலம்பெயர் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் திட்டத்தை” அமுல்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ், இந்தியப் பல்கலைக் கழகங்கள்/கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்புக் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு இந்திய வம்சாவழி கொண்ட ஆட்கள் (PIOs) மற்றும் இந்தியாவில் வதியாத இந்தியர்களுக்கு (NRIs) உதவிகள் அளிக்கப்படுகின்றன.

2. இலங்கையிலிருந்து இந்த வகைப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களும் இந்த புலமைப் பரிசிலுக்கு தகுதியுடையவர்களாவர் என்பதுடன் இதன் கீழ் அவர்கள் தொழில்சார் மற்றும் தொழில்சாரா ஆகிய இரண்டு வகைக் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கான (மருத்துவம்/துணை மருத்துவம் விலக்கலாக) நிதி உதவிகளுக்கு உரித்துடையவர்களாவர். புதுமுக வகுப்புக்கான மாணவர்கள் (முதலாம் ஆண்டு) மாத்திரமே விண்ணப்பிப்பதற்கு தகுதியுடைவர்களாவர். இந்தியாவில் தங்களது உயர் இரண்டாம்நிலைக் கல்வியைக் கற்ற மாணவர்கள் இந்தப் புலமைப் பரிசிலுக்கு தகுதியானவர்களல்லர்.

3. மேலதிக விபரங்கள் http://www.spdcindia.gov.in/login/guideline.php எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறுவதற்கு முடியும். தகுதியான விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட வலைவாசலில் (portal) நேரடியாக நவெம்பர் 30, 2019 அன்று சமர்ப்பிப்பதற்கு முடியும்.

*****

08.08.2019
கொழும்பு.